لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

## உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





மார்ச் - 2010 விலை ரூபாய் 7/-

# முஹம்மதிய்ய உம்மத்தில்
# ஈஸா, மஹ்தியின் வருகை

## திருக்குர்ஆனிலிருந்து...

''அவனே தன் தூதரை நேர்வழியுடனும், உண்மையான மார்க்கத்துடனும்-இதனை எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக - அனுப்பினான். இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவுக்கு வெறுத்தாலும் சரியே''. *(திருக்குர்ஆன் 9:33, 61:10)*

இந்த உம்மத்தில் தோன்றவிருந்த வாக்களிக்கப்பட்டவரை மேற்கண்ட வசனத்திற்குப் பொருத்தமானவராகக் குறிப்பிட்டு பல மார்க்க அறிஞர்கள் எழுதியுள்ளனர்.

தஃப்ஸீர் இப்னு ஜரீரில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

1. ஹஸா இந்த ஹுரூஜில் மஹ்திய்யி அதாவது இந்த வசனத்தில் கூறப்பட்ட இஸ்லாத்தின் வெற்றி என்பது மஹ்தியின் காலத்தில் நடைபெறும்.

*(தஃப்ஸீர் இப்னு ஜரீர் தொகுதி 15 பக்கம் 72)*

2. 'இதனை எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக' என்ற இந்த (61:10) வசனம் ஈசா (அலை) வெளிப்படும்போது நடைபெறும்.

*(தஃப்ஸீர் இப்னு ஜரீர் தொகுதி 25 பக்கம்: 54)*

3. தஃப்ஸீர் ஜாமிவுல் பயான் தொகுதி 29ல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

வ ஸாலிக இந்த நுஸூலி ஈசப்னி மர்யம். அதாவது இங்கு (61:10ல்) கூறப்பட்ட வெற்றி என்பது ஈசப்னு மர்யம் தோன்றும்போது ஏற்படும்.

4. பிஹாருல் அன்வார் தொகுதி 13 பக்கம் 13ல் கீழ்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

இந்த (61:10) வசனம் முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்பத்திலிருந்து தோன்றவிருக்கும் மஹ்தியைப் பற்றியதாகும்.

''மர்யத்தின் மகன் உவமையாக எடுத்துரைக்கப்படும்போது உமது சமுதாயத்தினர் அது குறித்து கூச்சலிடத் தொடங்குகின்றனர்.'' *(திருக்குர்ஆன் 43:58)*

## நபிமொழிகளிலிருந்து....

1. ''உங்கள் மத்தியில் இப்னு மர்யம் தோன்றும்போது நீங்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்களாக இருப்பீர்கள்! அவர் உங்களிலிருந்தே தோன்றி உங்களுக்கு இமாமாக இருப்பார்''. *(புகாரி பாபு நுஸூலி ஈசப்னி மர்யம்)*

2. ''ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''உங்களில் எவர் உயிருடன் இருப்பாரோ அவர் ஈசப்னு மர்யமை சந்திப்பார். அவர் இமாம் மஹ்தியாகவும், நீதி தீர்ப்பவராகவும் இருப்பார்....''

*(முஸ்னத் அஹ்மத் தொகுதி 2 பக்கம்:411)*

3. ''(முஸ்லிம்களே!) நீங்கள் (மஹ்தியாகிய) அவரைக் கண்டால் அவரிடம் பைஅத் செய்யுங்கள். பனிமலையில் தவழ்ந்து செல்ல நேர்ந்தாலும் சரியே. ஏனெனில் அவர் அல்லாஹ்வின் கலீஃபாவாகவும், மஹ்தியாகவும் இருக்கிறார் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.'' *(1. அபூதாவூது தொகுதி 2 பாப் ஹுருஜில் மஹ்திய்யி, 2. இப்னுமாஜா பாப் ஹுருஜில் மஹ்திய்யி, 3. பிஹாருல் அன்வார் தொகுதி 13 பக்கம் 21)*

## ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூலிலிருந்து...

''இதற்கு முன்னரும் நான் எனது நூல்களில் கீழ்வரும் தெளிவான ஒப்புதல் வாக்குமூலத்தை ஆணையிட்டு மக்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறேன். நான், சஹீஹ் புகாரியிலும் சஹீஹ் முஸ்லிமிலும், பிற சஹீஹான நூல்களிலும் உள்ள சஹீஹான ஹதீஸ்களில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் செய்தி அறிவித்த அதே வாக்களிக்கப்பட்ட மஸீஹ்தான் என என் உயிர் எவன் கையில் இருக்கின்றதோ, அந்த இறைவன் மீது ஆணையிட்டு இதே பத்திரிக்கையிலும் எழுதுகிறேன். வகஃபா பில்லாஹி ஷஹீதா (சாட்சியாக இருப்பதற்கு அல்லாஹ்வே போதுமானவன்)''.

*(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 326 17-08-1899)*

''உலகம் என்னை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் நான் உலகத்தைச் சார்ந்தவன் அல்லன். ஆனால் எவர்களுடைய இயல்புக்கு இந்த (ஆன்மீக) உலகத்தின் பங்கு வழங்கப் பட்டிருக்கின்றதோ அவர்கள் என்னை ஏற்றுக் கொள்கிறார்கள். இனியும் ஏற்றுக் கொள்வார்கள். மேலும் எவர் என்னை விட்டு விடுகிறாரோ அவர் என்னை அனுப்பிய (இறை)வனை விட்டு விடுகிறார். மேலும் எவர் என்னுடன் தொடர்பு வைத்துக் கொள்வாரோ அவர் எவனிடமிருந்து நான் வந்துள்ளேனோ அவனிடம் தொடர்பு வைத்துக் கொள்கிறார்''.

*(ஃபத்ஹே இஸ்லாம் பக்கம் 34)*

''இது இறைவனின் கையால் நடப்பட்ட மரமாகும். இறைவன் இதை ஒருபோதும் வீணாக்க மாட்டான். மேலும் அவனே இதற்கு நீர்ப்பாய்ச்சுவான். இதைச் சுற்றி வேலியமைப்பான். மேலும் வியக்கத்தக்க முன்னேற்றங்களை வழங்குவான். நீங்கள் (இதை அழிப்பதற்கு) கொஞ்ச முயற்சியா செய்தீர்கள்? எனவே இது மனிதனுடைய வேலையாக இருந்திருக்குமென்றால் இந்த மரம் எப்போதோ வெட்டப்பட்டிருக்கும். இதன் பெயரும் அடையாளமும் எஞ்சியிருக்காது.'' *(அஞ்சாமே ஆத்தம் பக்கம் 64)*

# பாவமன்னிப்புக் கோருங்கள்

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள்

29-09-1903 அன்று (சிலரிடம்) பைஅத் வாங்கிய பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பின்வருமாறு உரையாற்றினார்கள்:

என்னிடம் பைஅத் செய்பவர் ஒவ்வொருவரும், தாம் செய்யும் பைஅத்தின் நோக்கம் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும். அவர் உலகப் பயன்களுக்காகப் பைஅத் செய்துள்ளாரா அல்லது இறைவனது திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காகப் பைஅத் செய்துள்ளாரா என்பதை அவர் தெரிந்து கொள்ள வேண்டும்.

எத்தனையோ துர்பாக்கியசாலிகள் உலகப் பயன்களைப் பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக மட்டும் பைஅத் செய்துள்ளனர். இதனால் அவர்கள் பைஅத் செய்தும் அவர்களிடம் எந்த நல்ல மாற்றமும் ஏற்படுவதில்லை. உண்மையான பைஅத்தின் விளைவுகளும் பயன்களுமாகிய உண்மையான நம்பிக்கை, உண்மையான உறுதிப்பாடு, இறைஞானம் ஆகியவற்றிற்கான ஒளி அவர்களிடம் ஏற்படுவதில்லை. அவர்களது செயல்களில் எந்தச் சிறப்பும் தூய்மையும் ஏற்படுவதில்லை; அவர்கள் நன்மைகளில் முன்னேற்றம் பெறுவதில்லை; பாவங்களிலிருந்து அவர்கள் விலகிக் கொள்வதில்லை.

உலகப் பயன்களையே குறிக்கோளாகக் கொண்டவர்கள், ஒன்றை நன்றாக நினைவில் கொண்டிருக்க வேண்டும். அதாவது சில நாள்களைக் கொண்ட இந்த உலக வாழ்க்கை, வறுமையுடனோ, பொருள் வசதியுடனோ கழிந்து விடவே செய்யும். ஆனால் மறுமை பிரச்சினையோ மிகவும் கடினமான பிரச்சினையாகும். அது நிரந்தரமாக வாழும் இடமாகும். அதற்கு முடிவே இல்லை. அந்த இடத்திற்கு மனிதன் செல்லும்போது, இறைவனுடனான விவகாரத்தில் தூய்மையாகவும் இறைவனது அச்சம் தனது உள்ளத்தில் ஆதிக்கம் செலுத்திய நிலையிலும் பாவங்களிலிருந்து கழிவிரக்கங்கொண்டு பாவ மன்னிப்புக் கோரி, இறைவன் எவற்றைப் பாவங்களென்று கூறியுள்ளானோ அவற்றிலிருந்து விலகிக் கொண்டிருந்த நிலையிலும் சென்றால், இறைவனது அருள் அவனுக்கு உதவி செய்யும். அவன் ஒரு மேலான இடத்தை அடைவான். அங்கு இறைவன் அவனிடம் திருப்தி கொண்டவனாக இருப்பான்; அவன் தனது இறைவனிடம் திருப்தி கொண்டவனாக இருப்பான்.

அந்த மனிதன் மேற்கூறப்பட்டவாறு செய்யாமல், அலட்சியமாகத் தனது வாழ்வைக் கழித்தால், அவனது முடிவு பயங்கரமானதாகவே இருக்கும்.

எனவே பைஅத் செய்யும்போது, பைஅத்தின் நோக்கம் என்ன? இதனால் என்ன பயன் கிடைக்கும்? என்பதைத் தீர்க்கமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பைஅத் உலகிற்காக மட்டுமிருந்தால், அது பயனற்றதேயாகும். ஆனால் அது மார்க்கத்திற்காகவும் இறைவனது திருப்திக்காகவுமாக இருந்தால், அது வாழ்த்துக்குரியதும், தனது அசல்

நோக்கத்தைக் கொண்டதுமாகும். உண்மையான பைஅத்தினால் கிடைக்கும் பயன்கள் கிடைக்கும் என்று முழுமையாக நம்பலாம்.

இவ்வாறான பைஅத்தால் மனிதனுக்கு இரண்டு மாபெரும் பயன்கள் கிடைக்கின்றன.

முதலாவது அவர் தமது பாவங்களுக்காகக் கழிவிரக்கங்கொண்டு பாவமன்னிப்புக் கோருகின்றார். உண்மையாகவே பாவ மன்னிப்புக் கோரும் மனிதனை, அது இறைவனுக்குப் பிரியமானவனாக்கி விடுகின்றது. இதனால் தூய்மை பெறுவதற்கான வாய்ப்பு அந்த மனிதனுக்குக் கிடைக்கிறது. இது குறித்து இறைவன், பாவ மன்னிப்புக் கோருபவர்களை இறைவன் நேசிக்கின்றான்; பாவங்களின் ஈர்ப்புச் சக்தியிலிருந்து தூய்மை பெறுபவர்களையும் அவன் நேசிக்கின்றான் என்று கூறியுள்ளான்.

உண்மையிலேயே பாவங்களிலிருந்து கழிவிரக்கங் கொண்டு பாவ மன்னிப்புக் கோருவது மிகவும் மகத்துவம் பொருந்தியதாகும். பாவமன்னிப்புக்குரிய எல்லா நிபந்தனைகளுடனும் பாவ மன்னிப்புக் கோரப்பட்டால், அப்போதே அந்த மனிதனிடம் தூய்மைக்கான ஒரு விதை விதைக்கப்பட்டு விடுகின்றது. இது அவனை நல்லவர்களின் வாரிசுதாரனாக்கி விடுகின்றது.

இதனைக் குறித்தே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பாவங்களுக்காகக் கழிவிரக்கங் கொண்டு பாவ மன்னிப்புக் கோருபவர், பாவமே செய்யாதவரைப் போன்றவராகி விடுகின்றார் என்று கூறியுள்ளார்கள்.

எனவே பாவ மன்னிப்புக் கோருவதற்கு முன்னுள்ள பாவங்கள் அவருக்கு மன்னிக்கப்பட்டு விடுகின்றன. அந்த நேரத்திற்கு முன்னர் அவருக்கு ஏற்பட்டிருந்த நிலைகளையும் அர்த்தமற்ற செயல்களையும் நியாயமற்ற செயல்களையும் அவரிடமிருந்த குறைபாடுகளையும் இறைவன் தனது அருளால் மன்னித்து விடுகின்றான். இறைவனுடன் ஒரு நல்ல உடன்படிக்கை செய்யப்படுகின்றது. அன்றிலிருந்து ஒரு புதிய கணக்கு தொடங்குகின்றது.

எனவே அவர் இறைவனிடம் உண்மையான மனத்துடன் பாவமன்னிப்புக் கோரினார் என்றால், அப்போதிருந்து அவர் தனது பாவங்களுக்குப் புதுக் கணக்கைத் திறந்து, தம்மைப் பாவங்களின் அசுத்தங்களுக்கு ஆளாக்கி விடக் கூடாது. எனினும் அவர் எப்போதும் பாவ மன்னிப்புக் கோரிக் கொண்டும் துஆக்கள் செய்துக் கொண்டும் தமது (உள்ளத்தின்) தூய்மையின் பால் கவனம் செலுத்திக் கொண்டும் இறைவனைத் திருப்திப்படுத்தி அவனை மகிழ்விப்பதில் ஈடுபட்டுக் கொண்டும் இருக்க வேண்டும்; பாவ மன்னிப்புக் கோருவதற்கு முன்னர் கழிந்து விட்ட தமது வாழ்வின் நிலைகளின் மீது கழிவிரக்கங் கொண்டும் வெட்கமடைந்து கொண்டுமிருக்க வேண்டும்.

உலகில் கூடப் பாருங்கள். ஒருவரின் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டு விட்டால், அவர் தண்டனைக்குரியவராக ஆக்கப்படுகின்றார்.

குற்றம் செய்பவர் பற்றித் திருக்குர்ஆனில் இறைவன், 'நிச்சமாகத் தம்முடைய இறைவனிடம் குற்றவாளியாக

வருபவருக்குக் கிடைப்பது நரகம்தான். அவர் அதில் மரணமடைவதுமில்லை; வாழ்வது மில்லை' என்று கூறியுள்ளான். (20:75)

இது ஒரு குற்றத்திற்குரிய தண்டனை யாகும். எவர் ஆயிரக்கணக்கான - இலட்சக் கணக்கான குற்றங்கள் செய்கின்றாரோ அவரது நிலை என்னவாக இருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.......

எனவே இறைவன் தனது பேரருளால், பாவமன்னிப்புக் கோருதல் என்னும் வாசலைத் திறந்து வைத்திருக்கின்றான்; பாவமன்னிப்புக் கோருபவர்களது பாவங்களை அவன் மன்னித்து விடுகின்றான்.......

உண்மையான பைஅத்தால் கிடைக்கும் இரண்டாவது பயன் என்னவென்றால், (மேற்கூறப்பட்டவாறு) பாவமன்னிப்புக் கோருவதால், அவருக்கு ஒரு சக்தி கிடைக்கிறது. இதனால் அவர் ஷெய்யத்தானது தாக்குதலிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்.

பைஅத் செய்தவர்களாகிய நீங்கள், உலகைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கக் கூடாது; எனினும் இறைவனது திருப்தியையே குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்.......

நீங்கள் மறுமையைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்; மறுமையைப் பற்றிச் சிந்திப்பவருக்கு இறைவன் இவ்வுலகிலும் அருள் செய்கின்றான்.

ஒருவர் முழுமையான நம்பிக்கை கொண்டவராக ஆகும்போது, அவருக்கும் அவரல்லாதவருக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தி விடுவதாக இறைவன் வாக்குறுதியளித்துள்ளான். எனவே நீங்கள் முழுமையான நம்பிக்கையாளர்களாகுங்கள்... எந்தத் தொழுகையையும் விட்டு விடாமல் அதனைச் சரியாக நிறைவேற்றி வாருங்கள்.

கழிவிரக்கங்கொண்டு, பாவ மன்னிப்புக் கோருவதில் ஈடுபட்டிருங்கள்; மக்களது உரிமைகளைப் பாதுகாப்பவர்களாக இருங்கள்; எவருக்கும் தொல்லை கொடுக்காதீர்கள்; உண்மையிலும் தூய்மையிலும் முன்னேறிக் கொண்டிருங்கள்; இறைவன் உங்களுக்கு எல்லா வகையான அருள்களையும் செய்வான்.

*(அல்ஹகம், பாகம் 7, 17.10.1903)*

**தமிழில்**

**மவ்லவி P.M. முஹம்மது அலி, திருச்சி**


## நபி வழி சந்தா விபரம்

ஆண்டு சந்தா - **ரூபாய் 80/-** தனி பிரதி - **ரூபாய் 7/-**

D.D அல்லது காசோலை மூலம் அனுப்புபவர்கள் K.NASIR AHMED என்ற பெயரில் அனுப்பவும்.
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க : நிர்வாகி - **நபி வழி** அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை - 600 024. **Ph : 2481 7174**

தொடர் : 12

# தக்தீரே இலாஹி (இறை நியதி)

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)**

தக்தீர் (இறைநியதி)ன் மீது ஈமான் கொள்ளவில்லையென்றால், இறைவனிடமிருந்து தக்தீர் வெளிப்படவில்லையென்றால் என்ன பாதிப்புகள் ஏற்படும்? அதன்மீது நம்பிக்கை கொள்வதால் என்ன நன்மைகள் என்பனவற்றைப் பற்றி நான் இப்போது கூறுகிறேன்.

இது ஒரு முக்கியமான கேள்வியாகும். இது பற்றி நாம் சிந்திக்க வேண்டியது அவசியம். ஆனால் வெளிப்படையான சூஃபிகள், முல்லாக்கள் இதுபற்றி சிந்திக்கவேயில்லை.

(நேரம் அதிகமாகிவிட்டிருந்தது; மேலும் குளிரும் கடுமையாக இருந்தது; இன்னும் அதிகமான விஷயங்கள் சொல்லவேண்டியதிருந்ததால், இதன் மறுப்பகுதியை அடுத்த நாள் சொல்வதென்று முடிவாகி மாநாட்டு நிகழ்ச்சி இத்துடன் முடிந்தது. மறுநாள் ஆற்றப்பட்ட சொற்பொழிவின் மறுபகுதி கீழே தரப்படுகிறது:

**தக்தீர் தொடர்பான சில சந்தோகங்களின் நிவர்த்தி:**

தக்தீர் பற்றி விரிவாக எடுத்துரைத்த பிறகு அதன் மீது நம்பிக்கை கொள்வதனால் ஏற்படும் பயன்கள் பற்றி உங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும் என்பது என் நோக்கமாக இருந்தது. மேலும் இந்தக் கருத்தையே இன்று நான் ஆரம்பிக்க எண்ணியிருந்தேன். ஆனால் இன்று ஒருவர் சில கேள்விகளை எழுதி அனுப்பியுள்ளார். ஆகவே முதலில் சுருக்கமான முறையில் அதற்கான விடையைக் கூறுகின்றேன்.

ஷய்த்தானுக்கு வழிக்கெடுக்கின்ற ஆற்றல் எங்கிருந்து கிடைத்தது? என இந்த நபர் கேட்கிறார். மனிதன் தனது எண்ணங்களை ஷய்த்தானுக்குரியதாக ஆக்கும்போது அவனுக்கு ஷய்த்தானுடன் நெருக்கம் ஏற்பட்டு விடுகிறது என்று நான் நேற்று கூறியிருந்தேன். அப்போது ஷய்த்தானும் அவனோடு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறான். மேலும் அவன்

**அடிக்குறிப்பு:** அப்போது, ஈமான் பில் கத்ரி கய்ரிஹீ வஷர்ரிஹீ (நன்மை, தீமைகளின் நியதியின் மீது நம்பிக்கை கொள்ளுதல்) என்பதற்கு என்ன பொருள் என்று ஒருவர் கேட்டார். அதற்கு, நன்மையின் நற்கூலியும் அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கின்றன; தீமையின் தண்டனையும் இறைவனிடமிருந்தே கிடைக்கின்றன என நம்பிக்கை கொள்ளுதல் என்பதே இதற்குப் பொருள் என்று கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பதிலளித்தார்கள். மேலும் 'வினை செய்தவன் வினையறுப்பான்' என்ற கொள்கையை ஏற்று இறைவன் மீது பழி சுமத்தாமல் இருப்பதே நன்மை, தீமைகளின் நியதியின் மீது ஈமான் கொள்வதன் நோக்கமாகும் என்றும் விளக்கமளித்தார்கள்.

மனிதனை வழி கெடுக்க ஆரம்பித்து விடுகிறான். எனவே இந்த வழிகெடுப்பு உண்மையில் மனிதனுடைய நஃப்ஸினாலேயே உருவாகிறது.

நான் இதற்கு ஓர் உதாரணத்தை கூறுகிறேன். உதாரணமாக, ஒரு குடிகாரன் இன்னொரு குடிகாரனைத் தன்னுடன் கூட்டிச் செல்கிறான். அந்தக் குடிகாரன் எங்கெல்லாம் சாராயம் குடிப்பதற்காகச் செல்கின்றானோ அங்கெல்லாம் இவனும் செல்கின்றான் என்றால் நான் அவனைப் பின்பற்றும் நிலையில் இருக்கிறேன். அவன் எங்கு விரும்புகிறானோ என்னை அழைத்துச் செல்கிறான் என்று அவன் கூறினாலும் உண்மையில் அவனும் குடிகாரனின் கருத்தையே கொண்டிருக்கிறான். அவனுக்கும் குடிப்பதில் விருப்பம் உண்டு. எனவேதான் அவன் குடிகாரனுடன் செல்கிறான்.

இவ்விருவருக்குமிடையே உள்ள தொடர்பை மஸ்னவி (ரஹ்) அவர்கள் ஒரு நுட்பமாக உதாரணத்துடன் குறிப்பிட்டுள் ளார்கள். அவர்கள் கூறுவதாவது:

ஓர் எலி ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்துக் கொண்டு தன் பின்னால் இழுத்துக் கொண்டே சென்றது. அப்போது ஒட்டகம் போன்ற உயரமான விலங்கைக் கூட இழுத்துச் செல்லும் ஆற்றல் எனக்குக் கிடைத்து விட்டது என்று எலி நினைத்துக் கொண்டது. எலிக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. இவ்வாறு சென்று கொண்டிருக்கும்போது வழியில் ஆறு வந்தது. ஒட்டகம் தண்ணீரில் செல்ல விரும்பாததால் எலி தண்ணீரின் பக்கம் சென்றபோது ஒட்டகம் நின்று விட்டது. எலி ஒட்டகத்தை இழுக்க ஆரம்பித்தது. ஆனால் முடியவில்லை. அப்போது எலி ஒட்டகத்திடம், ‘ஒட்டகமே! இதுவரை நான் உன்னிடம் கூறியபடியே நீ என் சொல்லைக் கேட்டு என் பின்னால் வந்தாய். இப்போது நீ கேட்க மாட்டேன் என்கிறாயே? என்ன காரணம்?’ என்று கேட்டது. அதற்கு ஒட்டகம் நான் விரும்பும்வரை உன் பின்னால் நடந்தேன். இப்போது எனக்கு விருப்பம் இல்லை; எனவே வரமாட்டேன்’ என்றது.

அதாவது, எலி ஒட்டகத்தைக் கூட்டிச் சென்றபோது, எலியின் பின்னால் ஒட்டகம் செல்கிறது என்று வெளிப்படையாகப் பார்க்கும்போது தோன்றினாலும் உண்மை அதுவல்ல. எலி சென்று கொண்டிருக்கும் திசையை நோக்கியே ஒட்டகமும் தற்செயலாக தன் விருப்பப்படி சென்று கொண்டிருந்தது. இதே போன்று, ஷய்த்தானுக்கு மனிதனின் மீது அதிகாரம் இருக்கிறது என வெளிப்படையாகத் தோன்றினாலும் உண்மையில் அவனுக்கு அதிகாரமில்லை. மாறாக, மனிதன்தான் தனது கயிற்றை ஷய்த்தானின் கையில் கொடுத்துவிட்டு, தானே விரும்பி அவன் பின்னால் செல்கிறான்.

சில மனிதர்கள் ஷய்த்தானிடமிருந்து தன்னை விடுவிக்க விரும்பும்போது அவனைப் பின்பற்றுவதற்கு கடுமையான முறையில் மறுத்து விடுகிறார்கள். அப்போது ஷய்த்தானும் பயந்து அவர்களை விட்டு ஓடி விடுகின்றான்.

இன்னொரு கேள்வி : ‘அல்லாஹ் விரும்புவதையேயன்றி நீங்கள் வேறு எதனையும் விரும்புவதில்லை’ என திருக்குர்ஆனில் வந்துள்ளது. (81:30) மனித செயல்கள் அல்லாஹ்வின் விருப்பத்தின்கீழ் உள்ளன என்பது இதிலிருந்து தெரிகிறதே?

பதில் : இந்த வசனத்திற்கு கேள்வி கேட்டவரின் உள்ளத்தில் இருக்கும் அந்தப் பொருளன்று. இதற்கு முன்னுள்ள வசனங்களில் இவ்வாறு வருகிறது:

'நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்? இந்தக் குர்ஆன் இறைவனிடமிருந்து வந்த அறிவுரையும் போதனையுமன்றி வேறில்லை. (அதுவும் குறிப்பாக) உங்களுள் எவர் நேரான வழியில் செல்ல வேண்டும் என விரும்புகிறார்களோ அவர்களுக்காக'. (திருக்குர்ஆன் 81: 27-30)

இதற்குப் பிறகுதான் 'வமா தஷாவூன இல்லா அன்யஷா அல்லாஹு ரப்புல் ஆலமீன்' என்று கூறுகிறான். அதாவது நேரான வழியில் செல்ல வேண்டும் என்ற உங்களின் இந்த முயற்சி கூட இறைவனின் நாட்டத்திற்கேற்ப உங்கள் நாட்டம் இருந்தால்தான் வெற்றி பெற முடியும். அதாவது உங்களின் செயல்கள் மார்க்கச் சட்டத்திற்கேற்ப அமைந்திருக்க வேண்டும். உங்களின் கொள்கைகளும் மார்க்கச் சட்டத்திற்கேற்ப அமைந்திருக்க வேண்டும். எவற்றின் மீது ஈமான்கொள்ள இறைவன் கட்டளையிட்டானோ அவற்றின் மீது ஈமான் கொள்ள வேண்டும். நல்ல செயல்களான தொழுகை, நோன்பு, ஸகாத்து, ஹஜ் முதலிய கட்டளைகளை ஏற்று நடக்க வேண்டும். இப்படி நீங்கள் செய்தால் திருக்குர்ஆனின் நல்ல விளைவுகளை உணர்வீர்கள். இல்லையெனில் உணர முடியாது. இவ்வாறு கூறுவது 'நீங்கள் எமது விருப்பத்திற்கேற்றவாறு வேலை செய்தால்தான் நாங்கள் உங்களைப் பற்றி மகிழ்ச்சியடைவோம்' என்று ஒருவரிடம் கூறுவது போன்றதாகும். எனவே இந்த வசனத்திலிருந்து, அனைத்து மனித செயல்களையும் இறைவனே செய்ய வைக்கிறான். மனிதனுக்கு எந்த தொடர்பும் இல்லை என்று நிரூபணமாகவில்லை.

'அல்லாஹ்தான் விரும்புபவரை வழி தவறிச் செல்ல விடுகிறான்' (13:28) என்ற வசனத்தைப் பொருத்தவரை, அது குறித்து இப்போது கேள்வி கேட்க வேண்டிய தேவையில்லை. இது பற்றி நம் ஜமாஅத்தில் அதிகமாக எழுதப்பட்டுள்ளது. வழி தவறுபவர்களையே இறைவன் வழி தவறச் செய்கிறான் என்று இறைவனே இதற்கு விளக்க மளித்துள்ளான். அல்லாஹ் கூறுவதாவது:

'ஐயம் கொள்பவர்களையும் வரம்பு மீறுபவர்களையுமே இறைவன் வழி கேட்டில் விட்டு விடுகிறான். (40:35)

அவ்வாறே இன்னோரிடத்தில் கூறுவதாவது:

'அல்லாஹ் இதன்மூலம் கட்டுப்படாதவர்களையே வழிதவறச் செய்கின்றான். (2:27)

மேலும் அவன் கூறுவதாவது: 'வமாகானல்லாஹு லியுலிள்ள கவ்மன் பஅத இத் ஹதாஹும்'

பொருள் : அல்லாஹ் தானாகவே நேர்வழியை அனுப்பி பின்னர் தனாகவே சில மனிதர்களை எப்படி வழி தவறச் செய்வான்? (13:28).

ஆகவே தாமாகவே வழி தவறிச் செல்பவரைத்தான் இறைவனும் வழி தவறச் செய்கிறான். கண்களை மூடி வைத்திருப்பவர் என்றாவது ஒருநாள் குருடனாகவே ஆகிவிடுவார் என்பது உண்மையே. அதே போன்று ஆன்மீக கண்களினால் பயன்

பெறாதவரும் ஆன்மீகக் குருடராக ஆகிவிடுகிறார். இந்தச் சட்டத்தை ஏற்படுத்தியவன் இறைவனாக இருப்பதால் அதன் விளைவும் இறைவன் பக்கமே சாற்றிக் கூறப்படுகிறது.

இப்போது நான் ஒரு முக்கியமான சந்தேகத்தைப் பற்றிக் கூறுகிறேன். இறைநியதியைப் பற்றிய இந்த சந்தேம் கல்வியறிவு பெற்றவர்களிடம் பரவலாகக் காணப்படுகிறது. இன்று மக்களிடத்தில் ஆய்வு செய்யும் பண்பு அதிகமாகிவிட்ட அதே சமயத்தில் ஒவ்வொரு விஷயத்தை பற்றியும் அது ஏன் ஏற்பட்டது என்று அறிய விரும்புகின்றனர்.

உதாரணமாக, விதை முளைக்கிறதொன்றால் அது ஏன் முளைக்கிறது என்று ஆய்வு செய்யப்படுகிறது. முன்னேயெல்லாம் விதை பூமியில் தூவப்பட்டால் வானவர்கள் பூமியிலிருந்து வெளியே இழுத்து முளையச் செய்கின்றனர் என்று கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்று இவ்விதமான பேச்சை யாரும் கேட்கத் தயாரில்லை. ஏன் முளைக்கிறது? அதற்குக் காரணம் என்ன போன்றவற்றை அறிய விழைகின்றனர்.

இதே போன்று இன்ன பொருள் எங்கிருந்து வந்தது என்ற ஆய்வுகளும் செய்யப்படுகின்றன. உதாரணமாக, முதலில் வெயில் அடிக்கிறது. பிறகு திடீரென்று மேகம் வந்து விடுகிறது. இது எங்கிருந்து வருகிறது எனக் கேட்கின்றனர். தற்காலத்தைய அறிவை ஏற்றுக் கொள்பவர்கள், மேகம் பல நாட்களாக உருவாகிறது என்கின்றனர். மேலும் அது (மேகம்) எங்கோ தூரத்திலிருந்து வந்த நீராவி குளிர்ந்து இங்கு மேகமாக மாறியுள்ளது என்று அவர்கள் கூறுகின்றனர்.

மழைக்காக துஆச் செய்யப்பட்டது. எனவே மேகம் கூடியது என்று இப்படிப்பட்டவர்களிடம் கூறப்பட்டால் அதனைக் கேட்டு அவர்கள் சிரிப்பார்கள். மேலும் துஆ இப்போதுதானே செய்யப்பட்டது. ஆனால் மேகமோ இதற்கு பல நாட்கள் முன்னரே ஒன்றுகூடி இங்கே வந்திருக்கிறது. அப்படியிருக்கும்போது மழை வருவது துஆவின் விளைவினால் எப்படியிருக்க முடியும்? எனக்கேட்கின்றனர். இந்த மாதிரியான கேள்விகள் இன்றைய காலத்தில் கேட்கப்படுகிறது. ஆனால் இக் கேள்விகள் அனைத்தும் அபத்தமானவை.

மேகம் கூடுவதற்கான காரணிகள் இருக்கின்றன என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் கேள்வி என்னவென்றால், 10 இலட்ச வருடங்களுக்கு முன்பு அல்லது 10 கோடி வருடங்களுக்கு முன்பு அல்லது எந்த நேரம் நியமிக்கப்பட்டாலும் அதற்கு முன்பே இன்ன நேரத்தில் இன்ன சந்தர்ப்பத்தில் என்னுடைய இன்ன அடியார் துஆச் செய்வார் என்பது இறைவனுக்குத் தெரிந்திருக்குமா இல்லையா? அச்சமயத்தில் நான் அந்த அடியாருக்கு உதவி செய்ய வேண்டும் என்ற செய்தியும் அவனுக்குத் தெரியுமா? தெரியாதா? தெரியும் என்றால் எவ்வளவு காலத்திற்கு முன்னால் கூடியிருந்தாலும் அது அந்த அடியாருக்காகவே தயாரானது. அந்த நேரத்தில் அவனுடைய ஓர் அடியார் துஆச் செய்ய விருந்தார். இறைவனுடைய கருணைப் பண்பும் அச்சமயத்தில் அந்த மேகத்தை அங்கு அனுப்பவிருந்தது.

உண்மை இவ்வாறிருக்கும்போது, இவ்வித மான ஆட்சேபனைகள் அபத்தமானவை.

ஏனெனில் ஒரு விஷயம் நடப்பதற்கான காரணம் ஏற்கனவே இருக்கும் என்றால் பின்னால் தோன்றிய ஒன்று அதற்குக் காரணமாக ஆகி விடாது. விருந்தினர் வருவதற்கு முன்பே வெகுதொலைவி லிருந்து வருத்த வேண்டிய பொருள்களை நாம் வாங்கி வைப்பதில்லையா? அப்போது அந்தப் பொருள்களை விருந்தினர் வருவதற்கு முன்பே வாங்கி வைத்திருப்பதால் அவை அவர்களுக்காக வாங்கப்பட்டவையல்ல என்றாகிவிடுமா? அப்படி ஆகிவிடாது. இதேபோன்று இறைவன் மறைவானவற்றை அறியக் கூடியவனாக இருக்கின்றான். என் அடியார் இன்ன நேரத்தில் மழைக்காக துஆச் செய்வார் என்பதை இறைவன் அறிந்திருந்தான். எனவே அந்த அடியாரின் ஆசை நிறைவேறும் பொருட்டு, அவன் ஆரம்பத்திலிருந்தே கட்டளையிட்டிருந்தான் எனலாம். ஆகையால் அந்த மழை பெய்வது ‘பொது விதி’ யின் திரையில் வெளிப்பட்ட ஒரு ‘சிறப்பு விதி’யின் விளைவாக இருந்தது.

அவ்வாறு நிகழ்வதற்கு தக்கீரே தூண்டுகோலாக இருந்தது. பொதுவான இயற்கைக் காரணிகளால் அவ்வாறு நிகழவில்லை என்பது எப்படித் தெரிந்தது என்று இங்கு ஒரு கேள்வி எழுகிறது.

இதனைத் தெரிந்து கொள்வதற்கு, உலகில் சாதாரணமாகக் காணவியலாத இந்த மாதிரியான சம்பவங்கள் - அவை தற்செயலாக நடந்தன என்று கூற முடியாத வகையில் - தொடர்ச்சியாக நடைபெறு கின்றனவா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும். அவ்வாறு பொதுவாக நடைபெறுவதில்லை என்பது நிரூபண மாகிவிட்டால் அவை குறித்து ‘சிறப்பு விதி’ வெளிப்பட்டது என்று தெரிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, துஆக்கள் செய்யப் பட்டதும் மேகம் கூடியதுமாகிய இந்நிகழ்ச்சி கள் பலமுறை ஏற்பட்டிருந்தால் அதனை ‘தற்செயல்’ என்று கூறிவிட முடியாது. மாறாக அதற்கு ஏதாவது ஒரு காரணமுண்டு எனக்கொள்ள வேண்டும்.

இம்மாதிரியான சம்பவங்களில் ஒரு தொடர்ச்சி காணப்படுவதாலும் இவற்றை ‘தற்செயலாக நிகழ்ச்த சம்பவம்’ என்று கூறவியலாது. நூறு ஆண்டுகளுக்குப்பின் நூறு ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் மார்க்க சான்றோர்களின் துஆக்களுக்கு விடையாக இவ்வாறான பரிமாற்றங்கள் நடந்து வந்திருக்கின்றன. ஆகையால் இதனை ‘தற்செயல்’ என்று கூறிவிட முடியாது.

மேலும் ( சிறப்பு விதியாகிய) இவற்றை ‘தற்செயல்’ என்று கூறுபவர்களே ‘தற்செயல்’ என்று ஒன்று இல்லவே இல்லை. மாறாக ஒவ்வொன்றிற்கும் ஏதாவதொரு காரணம் இருக்கிறது என எழுதுகின்றார்கள்.

தற்செயல் குறித்து பேசுவதற்குத் தற்போது நேரமில்லை. இல்லையென்றால் ‘தற்செயல்’ பற்றி அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதையும் எடுத்துரைப் பேன். உலகம் சம்பந்தமான எந்த விவகாரத்தைப் பற்றியும் அது ‘தற்செயல்’ என ஏற்க மறுக்கும் அவர்கள் தமது கொள்கைக்கு எதிரான விஷயங்களை மட்டும் ‘தற்செயல்’ என்று ஏன் கூறுகின்றார்கள்?

சுருக்கமாக, காரணிகள் ஏற்கனவே

இருந்தாலும் 'தக்தீர்' (இறைநியதி) இறைவனிடமிருந்து வெளிப்படுகின்றது என்பதையும், அதற்காக அது தக்தீர் அல்ல என்று கூறிவிட முடியாது என்பதையும் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

**தக்தீர் பிரச்சினையைத் தவறாகப் புரிந்ததால் ஏற்பட்ட பாதிப்பு**

இந்தப் பிரச்னையைப் புரிந்து கொள்ளாததால் மக்கள் பெறும் நஷ்டங்கள் பற்றி இப்போது நான் மிகவும் வருத்தத்துடன் குறிப்பிடுகிறேன்.

'தக்தீர்' என்பது மனிதனுக்கு உயிரூட்டக் கூடிய மேலான படித்தரத்தைக் கொண்ட ஒன்றாக இருந்தது. ஆனால் அதன் மதிப்பு உணரப்படவில்லை என்பதே வருத்தத்திற்குரியது. திருக்குர்ஆனோடு நடந்து கொள்ளப்பட்டது போன்றே இதனுடனுடம் நடந்து கொள்ளப்பட்டிருக் கிறது. திருக்குர் ஆனோடு நடந்து கொள்ளப்பட்டது பற்றி இறைவன் கூறுகின்றான். மறுமையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம் இவ்வாறு கூறுவார்கள்:

''என் இறைவா! என் சமுதாயத்தினர் இந்தக் குர்ஆனை முதுகுக்கு பின்னால் தூக்கி எறிந்து விட்டனர்.'' (25:31)

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலத்தில் வாழ்ந்த - அவர்களை ஏற்றுக் கொள்ளாத மக்களையும் இது குறிக்கும். ஆனால் முஸ்லிம்களையும் குறிக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான சமுதாயம் இவர்கள்தான்.

இவர்களின் நேர்வழிக்காக வந்த இந்தக் குர்ஆன் - மனிதனை உயர்விலும் உயர்வான படித்தரம் வரை கொண்டு செல்ல வைக்க வந்த இந்தக் குர்ஆன் இன்று எவ்வாறு உபயோகப் படுத்தப்படுகிறது? ஒன்று வாழ்நாள் முழுவதும் திருக்குர்ஆனின் ஒரு சொல் கூட இவர்கள் காதில் படுவதில்லை. ஆனால் ஒருவர் மரணித்து விட்டால் அவருக்காக திருக்குர்ஆன் ஓதப்படுகிறது. ஆனால் மரணத்திற்குப் பிறகு, 'நீங்கள் இந்தக் குர்ஆனின் படி எந்த அளவுக்கு செயல்பட்டீர்கள்' என்று கேள்வி எழுமே தவிர மரணத்திற்குப் பிறகு எத்தனை முறை உங்கள் பேரில் குர்ஆன் ஓதி முடிக்கப்பட்டது என்று கேள்வி எழாது.

பிறகு முஸ்லிம்களின் பழக்கத்தில் உள்ள திருக்குர்ஆனின் இரண்டாவது 'உபயோகம், அறை அணாவிற்காக குர்ஆன்மீது பொய் சத்தியம் செய்யப்படுகிறது. இவ்விதமாக பிறருடைய உரிமைகளைப் பறிக்கும் கருவியாக குர்ஆன் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவது, முல்லாக்கள் திருக்குர்ஆனின் மூலமாக பலன் பெறுகிறார்கள். எப்படியெனில், யாராவது இறந்து விட்டால் அவரது பாவங்களை மன்னிக்கச் செய்வதற்காக அவரது வாரிசுகள் திருக்குர்ஆனைக் கொண்டு வருகின்றனர். முல்லா அவர்களை வட்டமாக உட்காரச் செய்கிறார்கள். குர்ஆனை ஒருவர் இன்னொருவருக்குக் கொடுத்தவராய் இதனை நான் உமக்காகக் கொடுத்தேன் என்பார்கள். அப்படிச் செய்வதால் மரணித்தவரின் பாவங்கள் விழுந்துவிடும் என்று கருதுகின்றனர். ஆனால் மரணித்தவரின் பாவங்கள் எங்கிருந்து அழியப்போகிறது? அந்த முல்லாக்களின் ஈமான், மரணித்தவருடைய வாரிசுகளின் 'ஈமான்' தான் அழிந்து விடுகிறது.

இன்னும் சிலர் இவ்வாறும் பயன்(?) பெறுகிறார்கள்:

எட்டு அணாவிற்காக குர்ஆனை முல்லாக்கள் கொண்டுவருகின்றனர். எவர் வீட்டிலாவது ஒருவர் இறந்து விட்டால் உடனே அவ்வீட்டிலுள்ளவர் குர்ஆன் வாங்க வருகிறார். அப்போது அவருக்கு அதிக விலையை முல்லாக்கள் கூறிவிடுகிறார்கள். இது ஒரு ரூபாயை விட குறைந்த விலைதானே என்று அவர் கூற, 'குர்ஆன் குறைந்த விலையில் விற்க முடியுமா? குறைந்த விலையில் அதனை விற்பது தடுக்கப்பட்டதாயிற்றே? 'லா தஷ்தரூ பி ஆயாதீ ஸமனன் கலீலா' (2:42) குறைந்த விலையில் திருக்குர்ஆனை வாங்காதீர்கள் என்று குர்ஆனிலேயே வருகிறதே? எனவே இதற்கு குறைந்த விலை வாங்க முடியாது' என்று முல்லா கூறிவிடுகிறார். ஆனால் 'உலகத்தின் எல்லா செல்வங்களும் குறைவானது' (4:78) என்றும்தான் திருக்குர்ஆன் கூறுகிறதே என்று அந்த அறிவிலிகளுக்குத் தெரிவதில்லை. 'சமனன் கலீலா' என்பதன் பொருள் இதனை உலகத்திற்குப் பகரமாக விற்காதீர்கள்' என்பதாகும்.

பிறகு, திருக்குர்ஆனை நல்ல உறைகளில் சுற்றி சுவற்றில் தொங்க விடுகின்றார்கள். அல்லது புத்தகப்பையில் போட்டு அதனை கழுத்தில் தொங்க விட்டுவிடுகின்றார்கள்- இவர் பெரியவர்; நல்லடியார்; எல்லாநேரமும் குர்ஆனை தன்னோடு வைத்துள்ளார் என மக்கள் நினைக்க வேண்டும் என்பதற்காக.

திருக்குர்ஆனை தவறாக உபயோகித்து அதிலிருந்து பயன் பெறாததைப் போன்றே 'தக்தீர்' பிரச்னை குறித்தும் அவர்கள் நடந்து கொள்கிறார்கள். தமது வெட்கத்தை மறைப்பதற்காக 'விதி'யை அவர்கள் சாக்காகக் கொள்கின்றனர். உதாரணமாக ஏதோ ஒரு வேலையாக செல்கிறார். வேலை நடைபெறவில்லை. உடனே நீர் பெரிதாக வாதம் புரிந்தீரே. ஆனால் இந்த வேலையை உம்மால் செய்ய முடியவில்லையே என்று மக்கள் கேட்பார்களே என பயந்து தமது வெட்கத்தை மறைப்பதற்காக, என் தலைவிதி அப்படி. நான் என்ன செய்ய முடியும்? என்று கூறிவிடுகின்றனர். எங்கெல்லாம் அவர்களுக்கு இழிவும் அவமானமும் ஏற்படுகிறதோ அங்கெல்லாம் அவர்கள் 'தலைவிதி'யின் மீது பழியை சுமத்தி விடுகிறார்கள். ஆனால் 'தக்தீர்' (இறைநியதி) என்பது, வெட்கத்தில் மூழ்கி விடுவதற்காக ஏற்படுத்தப்படவில்லை. மாறாக, முன்னேற்றங்களை வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. அடுத்து எவர் நஷ்டமடைகின்றாரோ அவர் தக்தீரின் மூலம் பயன் பெறாததனாலேயே அவ்வாறு நஷ்டமடைகின்றார். **(தொடரும்)**

**தமிழில்:**

**மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A**

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

# ஜமாஅத்தின் பணிகளை எப்பொழுதும் கண்ணியத்தோடு பாருங்கள்!

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மத்**
**இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)**

‘‘நீங்கள் என்ன விரும்புகிறீர்களோ செய்து கொள்ளுங்கள். ஆனால் நினைவில் கொள்ளுங்கள். அந்த நாள் வரப்போகிறது. அப்பொழுது அஹ்மதிய்யத்தின் பணிகளில் பங்கெடுத்தவர்கள் பெரும் பெரும் கண்ணியத்தை பெறுவார்கள். ஆனால் இப்பொழுது ஜமாஅத்தின் பணிகளில் எவ்வித ஆர்வமும் காட்டாத மக்களின் சந்ததிகள் விரட்டப்படுவார்கள். இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா போன்ற மாபெரும் அரசுகள் ஆலோசனைக்காக தமது பிரதிநிதிகளை அனுப்பி வைக்கும்போது அதை அவர்கள் தமது கவுரவத்திற்குக் காரணமாகக் கருதுவார்கள். அந்நேரத்தில் அம்மக்க ளுடைய சந்ததிகள் எங்களையும் ஆலோ சனையில் இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறுவார்கள். ஆனால் அப்போது கூறக் கூடியவர் அவர்களிடம், போங்கள்! உங்களது மூதாதையர்கள் இந்த ஆலோசனையை தமது காலத்தில் மறுத்து விட்டார்கள். மேலும் ஜமாஅத்தின் பணிகளில் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. எனவே உங்களையும் ஆலோசனையில் இணைத்துக் கொள்ள முடியாது எனக் கூறுவார்கள்.

ஆகவே இந்த கவனக்குறைவை நீக்கி விடுங்கள். மேலும் உங்களுக்குள் இந்த உணர்வை ஏற்படுத்திவிடுங்கள். எவர் ஜமாஅத்தின் ஏதேனும் ஒரு கூட்டத்தில் கலந்து கொள்கிறாரோ அவர் மீது எந்த அளவுக்கு அருள் இருக்கிறது என்றால் அமெரிக்கா கவுன்சில் உறுப்பினர் கூட அவர் முன் மதிப்பற்றவராவார். மேலும் அவர் நூற்றுக்கணக்கான தடைகளைக் கடந்தாலும் அந்த கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். அவர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றால் அவரது வருகையின்மையால் ஜமாஅத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. ஆனால் அவர் தாமே இறை அருளிகளிலிருந்து பயனடையாமல் போய்விடுவார். ஆலோசனை இல்லாத போதும் பணிகள் நடந்தன. இப்போது ஆலோசனைக்கு அழைக்கும்போதும் பணிகள் நடக்கின்றன. ஆகவே நீங்கள் பங்கெடுத்தாலும், பங்கெடுக்கவில்லை என்றாலும் ஜமாஅத்தின் பணிகளோ நடந்து கொண்டுதான் இருக்கும்.

ஆம்! நீங்கள் இந்நேரத்தில் ஜமாஅத்தின் பணிகளில் பங்கெடுக்கவில்லை என்றால், அதை தமது கண்ணியத்திற்குக் காரணமாக கருதவில்லை என்றால் உங்களது சந்ததிகள் வருங்கால அருள்களிலிருந்து பயனடையா தவர்களாகி விடுவார்கள். மக்கள் தமது வாழ்க்கையில் தமது சந்ததிகளின் உபயோகத் திற்காக ஆயிரமாயிரம் ரூபாய்களுக்கான சொத்துக்களை உருவாக்கி சென்று விடுகிறார்கள். நீங்களும் ஜமாஅத் பணிகளில் பங்கெடுத்து வந்தால், இவ்வாறு செய்வது உங்களது சந்ததிகளுக்கு ஒரு விலைமிகுந்த சொத்தாகிவிடும். நினைவில் கொள்ளுங்கள்! உங்களில் எவரையாவது ஜமாஅத்தின் ஏதேனும் பணிக்காக நியமித்தால் அதை விட்டு தப்பி ஓடுவது கடும் தவறாகும். நீங்கள் ஜமாஅத்தின்

பணியை முழுமை செய்வதில் ஒருபோதும் குறைவு காட்டி விடாதீர்கள். மாறாக அதை தனது கண்ணியத்திற்குக் காரணமாகக் கருதுங்கள். நீங்கள் ஜமாஅத்தின் பணிகளை கண்ணியமிக்கதாகக் கருதினால் இறைவனும் உங்களை கண்ணியமிக்கவனாக ஆக்கி விடுவான். இந்நேரத்தில் ஜமாஅத்திடம் செல்வம் இல்லாமல் இருக்கலாம். (ஜமாஅத்திற்கு) உலகத்தில் எவ்வித முக்கியத்துவமும் இல்லாமல் இருக்கலாம். ஆனால் குறுகிய காலத்திலேயே அஹ்மதிய்யத் உலகத்தின் மீது ஆதிக்கம் பெற்றுவிடும். மேலும் இதற்கான அறிகுறிகள் அல்லாஹ்வின் அருளால் தென்படுகின்றன. மாபெரும் மனிதர்களது கவனம் அஹ்மதிய்யத்தின் பக்கம் திரும்புகிறது. இந்த மாபெரும் மனிதர்கள் எந்த இடத்திலிருந்து வந்தாலும் அவர்கள் அஹ்மதிய்யத்தை மிகவும் கண்ணித்திற் குரியதாகக் கருதுவார்கள். அஹ்மதிய்யத்தின் காரணமாக அவர்களுக்கு மேலும் கண்ணியம் கிடைக்கும். ஆனால் எவர்கள் ஜமாஅத்தின் பணிகளில் ஈடுபடுவதை இழிவாகவும், நேரத்தை வீணாக்குவதாகவும் கருதுவார்களோ அவர்களது ஊர்களில் கண்ணியம் தாமதமாகத்தான் வரும். மேலும் அந்த கண்ணியம் வந்து விட்டாலும் எவர்கள் தமது காலத்தில் ஜமாஅத்திற்கு தொண்டு செய்வதில் குறைவு காட்டினார்களோ அவர்களது சந்ததிகள் அந்த கண்ணியத்திலிருந்து பயனடையாமல் போவார்கள். ஆகவே எதிர்காலத்திற்காக முன்னெச்சரிக்கையாக இருங்கள். மேலும் எப்பொழுதும் ஜமாஅத்தின் பணிகளை கண்ணியத்தோடு பாருங்கள். உங்களுள் எவரையாவது ஜமாஅத்தின் ஏதேனும் பணியில் நியமனம் செய்தால் இறைவன் அவருக்கு மிகப்பெரும் பட்டம் சூட்டியதாக அவர் நினைத்துக் கொள்ளட்டும்''.

(அறிக்கை : மஜ்லிஸே முஷாவரத் 1956 பக்கம் 24, 25)

**தகவல்**

**மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மத்**

# முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா இண்டர்நேஷனல் (MTA)

இஸ்லாமிய போதனைகளை உலக மக்களுக்கு எடுத்துரைப்பதற்காகவும், உலக அமைதியை நிலைநாட்டவும், மத நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் உருவாக்கப்பட்ட தொலைக்காட்சிதான் முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா **(MTA)** என்னும் செயற்கைகோள் ஒளிபரப்பு.

டிஷ் ஆன்டன்னா மூலமாக **MTA** நிகழ்ச்சிகளைக் காணலாம். விவரம் கீழே தரப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Satellite | : | Asia Sat 3S | Position | : | 105.5° East |
| Frequency | : | 3760 mhz | MID Dish size | : | 1.8 metre |
| Polarisation | : | Horizontal | Symbol Rate | : | 26000 Mbps |
| Fec | : | 7/8 | Vedio Pid | : | - |
| Main Audio Pid | : | Auto | | | |

தொடர் : 6

# சிறுவர் பகுதி

# ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி, (அலைஹிஸ்ஸலாம்)

**32. வஆகரீன மின்ஹுூம் லம்மா யல்கூஹபிஹிம்**

பொருள்: மேலும் (நபித் தோழர்களாகிய) அவர்களைச் சேராத மற்றவர்களின் ஜமாஅத்திலும் அல்லாஹ் அ(ந்த தூது) வரை அனுப்புவான். *(திருக்குர்ஆன் 62:4)*

**33. வமுபஷ்ஷிரம் பிரஸூலின் யஃதீ மின்ப்ப அதிஸ்முஹூ அஹ்மத்**

பொருள் : (மர்யமின் மகன் ஈசா தமது சமுதாயத்திடம்) கூறினார்: எனக்குப் பிறகு அஹ்மத் என்ற பெயரைக் கொண்ட ஓர் இறை தூதர் வருவதைப் பற்றி நான் நற்செய்தி கூறுகிறேன். *(திருக்குர்ஆன் 61:7)*

**34. இமாமன் மஹ்திய்யன் ஹகமன் அத்லன் ஃபயக்ஸிருஸ் ஸலீப**

பொருள் : (வரக் கூடிய வாக்களிக்கப்பட்டவர்) இமாம் மஹ்தியாகவும், சிலுவையை முறிப்பவராகவும் இருப்பார்.

(முஸ்னது அஹ்மது)

**35. கய்ஃப அன்த்தும் இஸா நஸலப்னு மர்யம ஃபீக்கும் வஇமாமுக்கும் மின்கும்.**

பொருள்: (முஸ்லிம்களே!) உங்கள் மத்தியில் இப்னு மர்யம் தோன்றும் போது உங்களின் நிலை எவ்வாறு இருக்கும்? அவர் உங்களிலிருந்தே தோன்றி உங்களுக்கு இமாமாக இருப்பார். *(ஸஹீஹ் புகாரி)*

**36. அலா மன் அத்ரகஹூ ஃபல்யக்ரஃ அலைஹிஸ்ஸலாம்.**

பொருள்: (முஸ்லிம்களே! கேளுங்கள். உங்களில் யார் வாக்களிக்கப்பட்ட இமாம் மஸீஹை சந்திப்பாரோ அவர் என் சார்பாக அவருக்கு என் சலாத்தை எட்ட வைக்கவும்.
*(திப்ரானீ)*

36. அல்லாஹ் என்னிடம், நீர் இந்துக்களுக்கு கிருஷ்ணரகவும், முஸ்லிம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகவும் இருக்கின்றீர் எனக் கூறியிருக்கிறான் *(லெக்சர் யாஹில் கோட்)*

37. எனது நுபுவ்வத் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத்துதான். எந்தவொரு புதிய நுபுவ்வத்தும் அல்ல.
*(சஷ்மயே ம∴ரி∴பத் பக்கம் : 324)*

எனது நுபுவ்வத் என்பதன் கருத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றியதன் விளைவாக இறைவனுடன் அதிகமாக உரையாடுவதும் பேசுவதுமாகும். *(ததித்மா ஹகீகத்துல் வஹீ பக்கம் : 68)*

இந்த இருண்ட காலத்தின் ஒளி நானே ஆவேன்.
*(மஸீஹ் ஹிந்துஸ்தான் மேன்)*

38. உலகத்தில் ஓர் எச்சரிப்பாளர் வந்தார். உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இறைவன் அவரை ஏற்றுக் கொள்வான். மேலும் மாபெரும் வல்லமைமிக்க தாக்குதல்களிலிருந்து அவருடைய உண்மையை வெளிப்படுத்துவான். *(தஸ்கிரா)*

# நான் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டுள்ளேன்?

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி)**

என்னிடம் பம்பாய் வானொலி நிலையத்தினர் நான் இஸ்லாத்தை ஏற்பதன் காரணம் என்ன? என்று அவர்களுக்கு கூற வேண்டுமென விருப்பட்டனர். அப்பொழுது எனக்கு நானே இந்த கேள்வியை கேட்டுக் கொண்டேன்; ஆகவே எந்த சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நான் மற்ற பொருட்களை ஏற்கின்றேனோ அதே ஆதாரத்தினால்தான் ஏற்றுக் கொண்டுள் ளேன். அதாவது அது உண்மையானது என்பதனால் ஆகும் என என் மனம் பதிலளித்தது.

இந்த வார்த்தைகளின் விளக்கம் என்னவெனில், என் பார்வையில் மார்க்கத்தின் அடிப்படை விஷயம் இறைவனின் இருப்பு ஆகும். எந்த மார்க்கம் மனிதன் மற்றும் இறைவனின் மத்தியில் உண்மையான தொடர்பை ஏற்படுத்த முடியுமோ அது உண்மையான மார்க்கம் ஆகும். மேலும் எந்த பொருளும் அது உண்மையாக இருப்பதே அதன்மீது நம்பிக்கை கொள்ள போதுமானதாகும். ஏனெனில் யார் உண்மையை ஏற்க மறுக்கின்றனரோ, அவர்கள் பொய்யை ஏற்கும் கட்டாயத்திற்குள்ளாகி விடுகின்றனர். மேலும் அவர்கள் தமக்கும் மனித குலத்திற்கும் எதிரி ஆவார்கள்.

இஸ்லாம் போதிப்பது என்னவெனில், உலகத்தை உருவாக்கியவன் ஒரு உயிருள்ள இறைவன் ஆவான். அவன் முன்னரைப் போன்றே இன்றைய கால கட்டத்திலும், தனது அடியார்களுக்காக தோன்றுகிறான். இந்த வாதத்தை இரு முறையில் சோதித்துப் பார்க்கலாம். முதலாவது, அவ்வாறு தேடுபவர்களுக்கு இறைவன் தனது வல்லமைகளை வெளிப்படுத்துகிறான். அல்லது எவர்களின் மூலம் இறைவனின் வல்லமை வெளிப்படுத்துகிறதோ அவர்களை ஆராய்ந்து நாம் அவர்களின் வாதத்தின் உண்மையை அறிந்து கொள்ளலாம். ஏனெனில் எவர்களுக்காக இறைவன் தனது இருப்பை பலமுறை மற்றும் வழக்கத்திற்கு மாறான முறையில் வெளிப்படுத்தியுள்ளானோ அப்படிப்பட்ட அனுபவசாலிகளில் ஒருவனாக இறையருளால் நான் இருக்கிறேன்.

இஸ்லாத்தின் உண்மையை நானே என் சொந்த அனுபவத்தால் அறிந்துள்ளேன். எனவே இதைவிட பெரிய வேறு எந்த ஆதாரமும் எனக்குத் தேவையில்லை.

ஆனால் எவர்களுக்கு இன்னும் அனுபவம் ஏற்படவில்லையோ அவர்களுக்கு நான் என்னுடைய சொந்த அனுபவத்துடன், எவை என்னை இஸ்லாத்தின் மீது நம்பிக்கை கொள்ள வைத்தனவோ அந்த ஆதாரங்களை விளக்குகிறேன்.

**முதலாவதாக :** நான் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை வைக்கிறேன். ஏனெனில் இஸ்லாம், எல்லா மார்க்க விவகாரங்களையும்-அதன் தொகுப்புதான் மார்க்கம் என அழைக்கப்படுகிறது- அவற்றை என்மீது கட்டாயப்படுத்தி திணிப்பதில்லை. மாறாக எல்லா விஷயங்களுக்கும் சான்றுகளைத் தருகிறது. இறைவனின் இருப்பு, அவனது பண்புகள்,

வானவர்கள், துஆ, அதன் விளைவுகள், இறை தீர்ப்பு மற்றும் விதி, இவற்றின் எல்லை, வழிபாடு மற்றும் அதன் அவசியம் மார்க்கச் சட்டம் அதன் பயன், இல்ஹாம் மற்றும் அதன் முக்கியத்துவம் இறப்பிற்கு பிறகு எழுப்பப்படுதல், சொர்க்கம், நரகம், இவற்றில் இஸ்லாம் விளக்காத எந்த விஷயமும் இல்லை. மேலும் மனித மூளையின் திருப்திக்காக, அபாரமான ஆதாரங்களுடன் நிரூபிக்காமல் இல்லை. எனவே இஸ்லாம் எனக்கு ஒரு மார்க்கத்தை மட்டும் வழங்கவில்லை. மாறாக ஒரு நம்பும் அறிவை வழங்கியுள்ளது. இதனால் எனது மூளைக்கு அமைதி கிடைக்கிறது. மேலும் மூளை மார்க்கத்தின் அவசியத்தை ஏற்றுக் கொள்கிறது.

**இரண்டாவதாக :** நான் இஸ்லாம் மீது நம்பிக்கை வைத்திருப்பதன் காரணம், இஸ்லாம் தனது வாதங்களுக்கு வெறும் கதைகளை மட்டும் அடிப்படையாக வைக்கவில்லை. மாறாக அது எல்லா நபர்களையும் அனுபவத்தின் பக்கம் அழைக்கிறது. மேலும் எல்லா உண்மையையும் ஏதாவதொரு வகையில் இந்த உலகத்திலேயே அடையாளம் காண முடியும் என்று கூறுகிறது. இவ்வகையில் இஸ்லாம் என் மனதிற்கு அமைதியைக் கொடுக்கிறது.

**மூன்றாவதாக :** நான் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்பதன் காரணம், இறைவனின் வார்த்தையிலும் அவனது செயலிலும் முரண்பாடு இருப்பதில்லை என்னும் பாடத்தை இஸ்லாம் எனக்கு வழங்குகிறது. மேலும் இஸ்லாம் என்னை அறிவியல் மற்றும் மார்க்க சச்சரவுகளிலிருந்து விடுவிக்கிறது. அது என்னை இயற்கைச் சட்டங்களை பொருட்படுத்தாமலிருக்குமாறும் அவற்றிற்கு எதிரான விஷயங்களில் நம்பிக்கை வைக்குமாறும் கற்றுக் கொடுக்கவில்லை. மாறாக அது எனக்கு இயற்கைச் சட்டங்களை சிந்திக்குமாறும் அவற்றிலிருந்து பயன்பெறுமாறும் போதிக்கின்றது. மேலும் வேதத்தை இறக்குபவனும் இறைவன்; உலகத்தை படைத்தவனும் இறைவனே ஆவான். எனவே அவனது சொல் மற்றும் செயல்களில் எந்த முரண்பாடும் இருக்க முடியாது. எனவே நீங்கள் அவனது வார்த்தைகளை புரிவதற்காக அவனது செயல்களைப் பார்க்க வேண்டும். மேலும் அவனது செயல்களை புரிவதற்காக அவனது வார்த்தைகளை பார்க்க வேண்டும். இவ்வாறாக இஸ்லாம் எனது உள்ளத்திற்கு ஆறுதலை வழங்குகிறது.

**நான்காவதாக :** நான் இஸ்லாத்தை ஏற்பதன் காரணம், அது எனது உணர்வுகளை நசுக்குவதில்லை. மாறாக அவற்றை சரியான முறையில் வழி நடத்துகிறது. அது எனது உணர்ச்சிகளைக் கொன்று எனது மனிதாபிமானத்தை உயிரற்றவையாக மாற்றுவதும் இல்லை. மேலும் எனது உணர்ச்சிகள் மற்றும் விருப்பங்களை பிடியில்லாமல் விட்டு விட்டு, என்னை விலங்கு அளவிற்று விழ வைப்பதுமில்லை. மாறாக எவ்வாறு ஒரு திறமை மிக்க என்ஜினியர் சுதந்திரமான நீரை கட்டுக்குட் படுத்தி கால்வாயாக மாற்றுகிறாரோ மற்றும் அது செல்லும் இடங்களிலேல்லாம் பசுமையை உண்டு பண்ணுகிறாரோ அதைப் போன்றே இஸ்லாம் எனது உணர்ச்சிகள் மற்றும் விருப்பங்களை தேவைக்கேற்ப கட்டுக்குட்படுத்தி அவற்றை உயர்ந்த நற்பண்புகளாக மாற்றுகிறது.

இறைவன் உனக்கு அன்பு செலுத்தும் உள்ளத்தைக் கொடுத்திருந்தாலும் வாழ்க்கைத் துணைவரை மேற்கொள்ள தடை செய்கிறான் என்று அது என்னிடம் கூறுவதில்லை அல்லது உண்ணுவதற்காக நாவில் சுவையையும் மனதில் விருப்பத்தையும் உருவாக்கியிருந்தாலும் சுவை மிக்க சிறந்த உணவுகளை உனக்குத் தடுத்துள்ளேன் என்று கூறுவதில்லை. மாறாக, இஸ்லாம் கூறுகிறது: நீ நேசம் காட்டு. ஆனால் தூய அன்பைக் காட்டு. ஆகுமான அன்பைக் காட்டு. உன் தலைமுறை மூலமாக தூய எண்ணங்களை உலகில் எப்பொழுதும் பாதுகாக்கும் அளவிற்கு தூய்மையான, உன்னதமான அன்பை செலுத்து. மற்றும் நீ தூய உணவையே உண்; ஆனால் உன் அண்டை வீட்டில் இருப்பவன் பசியில் இருக்கிறான்; நீ உண்கிறாய் என்றில்லாமல் ஒரு எல்லைக்குட்பட்டு இரு. சுருக்கமாக, இஸ்லாம் எல்லா மனித இயல்பின் விருப்பங்களையும் தேவைக்கேற்ப கட்டுப்படுத்தி மனித இயல்பின் விருப்பங்களின் எல்லையிருந்து வெளியேற்றி உயர்ந்த நற்பண்புகளில் நுழைத்து விடுகிறது. மேலும் அது என் மனிதாபிமானத்தின் அமைதிக்கு வழி வகை செய்கிறது.

**ஐந்தாவதாக:-** பிறகு நான் இஸ்லாத்தின் மீது நம்பிக்கை வைப்பதன் காரணம், இஸ்லாம் என்னுடன் மட்டுமில்லாமல் முழு உலகத்துடன் நீதி மற்றும் அன்புடன் நடந்து கொள்கிறது. அது எனக்கு என்னுடைய உரிமைகளை பாதுகாக்கும் பாடத்தை கொடுப்பது மட்டுமில்லாமல் என்னை உலகின் எல்லாவற்றுடனும் நீதியுடன் நடந்து கொள்ள அறிவுரை கூறுகிறது. மேலும் அதற்காக தேவைக்கேற்ப என்னை வழி நடத்துகிறது. அது ஒரு பக்கம் தாய், தந்தையின் உரிமைகளை எடுத்துரைக்கிறது. பிள்ளைகள் பெற்றோருடன் நல்லமுறையில் நடந்து கொள்ளவும் அவர்களை தனது சொத்தில் பங்குதாரர்களாக ஆக்கவும் போதிக்கிறது என்றால்மறுபுறம் பெற்றோர்களையும் பிள்ளைகளுடன் நன்முறையில் நடந்து கொள்ளவும் அவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கவும் உயர்ந்த தர்பிய்யத் கொடுக்கவும் நற்பண்புகளை கற்றுக் கொடுக்கவும் அவர்களது உடல்நிலையை பாதுகாக்கவும் கட்டளையிடுகின்றது. மேலும் அவர்களை பெற்றோர்களின் ஒரு குறிப்பிட்ட அளவு வரை வாரிசுகளாக ஆக்கியுள்ளது.

அதே போன்று இஸ்லாம், கணவன் மனைவிக்கிடையில் சிறந்த உறவுகளை நிலைநிறுத்த கட்டளைகளை வழங்கியுள்ளது. மேலும் அவர்களை ஒருவருக்கொருவர் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் ஒருவர் மற்றவரது உணர்ச்சிகளை கவனத்தில் கொள்ளுமாறும் கட்டளையிடுகின்றது. இஸ்லாத்தின் தோற்றுநர் எப்படிப்பட்ட பொன்வரிகளை கூறுகிறார்கள் என்றால், பகலில் மனைவியை அடித்தும், இரவில் அன்புடன் நடந்து கொள்ளும் மனிதர் எவ்வாறு மனித இயல்பின் அழகினை மறந்து விடுகிறார் எனக் கூறினார்கள். மேலும் உங்களில் யார் தனது மனைவியுடன் நல்லமுறையில் நடந்து கொள்கின்றாரோ அவரே உயர்ந்த ஒழுக்கங்களைக் கொண்டவர் ஆவார். மேலும் கூறினார்கள்: பெண் கண்ணாடியைப் போன்று மென்மையான வராவார். நீங்கள் எவ்வாறு கண்ணாடியை பாதுக்காப்பாக உபயோகப்படுத்துவீர்களோ

அதே போன்று பெண்களிடமும் பாதுகாப்புடன் நடந்து கொள்ளுங்கள்.

பிறகு இஸ்லாம் சிறுமிகளின் உரிமைகளையும் புறக்கணித்து விடவில்லை. அவர்களுக்கு குறிப்பாக கல்வி கொடுப்பதில் அழுத்தம் தருகிறது. மேலும் எவர் தனது பெண்ணிற்கு நல்ல கல்வி கொடுக்கிறாரோ மற்றும் அவளுக்கு நல்ல ஒழுக்கப் பயிற்சி கொடுக்கிறாரோ அவருக்கு சொர்க்கம் கட்டாயமாகி விடுகிறது என்று கூறினார்கள். மேலும் இஸ்லாம் பெண்களையும் பெற்றோரின் சொத்து களுக்கு வாரிசாக ஆக்கியுள்ளது.

பிறகு இஸ்லாம் அதிகாரிகளிடம் குடிமக்களிடமும் நீதியுடன் நடந்துள்ளது. இஸ்லாம் அதிகாரிகளிடம் கூறுகிறது: ஆட்சி உங்களது சொத்து அன்று; மாறாக அது நம்பி ஒப்படைக்கப்பட்ட ஒன்றாகும். எனவே நீங்கள் ஒரு நேர்மையான மனிதரைப் போன்று ஒப்படைக்கப்பட்ட இதனை முழுவதுமாக நிறைவேற்ற எண்ணுங்கள். மேலும் மக்களின் ஆலோசனையின்படி செயல்படுங்கள்.

மேலும் இஸ்லாம் மக்களிடம் கூறுகிறது: இறைவன உங்களுக்கு ஆட்சியை ஓர் அருளாக அளித்திருக்கிறான். ஆட்சி செய்ய தகுதியுள்ளவரை உங்கள் ஆட்சியாளராக தேர்ந்தெடுங்கள். மேலும் அவர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு முழுவதுமாக கீழ்ப்படியுங்கள். மேலும் கலகம் செய்யாதீர்கள். ஏனெனில், இவ்வாறு செய்வது நீங்கள் உங்கள் வீடுகளைக் கட்டி உங்கள் கைகளாலேயே அதனை அழிப்பது போன்றதாகும்.

மேலும் இஸ்லாம் முதலாளி தொழிலாளியின் உரிமைகளையும் நீதியுடன் தீர்ப்பளிக்கிறது. அது முதலாளியிடம், நீங்கள் ஒருவரை கூலிக்காக அமர்த்தும்போது அவருடைய முழு உரிமையையும் கொடுங்கள். மேலும் அவரது வியர்வை காயும் முன்பே அவரது கூலியை கொடுத்துவிடுங்கள். மேலும் உன் கட்டுப்பாட்டிற்குள் உள்ளவரை இழிவுபடுத்தாதீர்கள். ஏனெனில் அவர் உமது சகோதரர் ஆவார். அவரை கண்காணிக்கும் பொறுப்பை இறைவன் உங்களிடம் கொடுத்திருக்கிறான். மேலும் அவரை உமது வலிமையின் காரணமாக ஆக்கியுள்ளான். எனவே நீங்கள் உங்களின் வலிமையை அறியாமையினால் நீங்களே உடைத்து விடாதீர்கள் என்று கூறுகிறது.

மேலும் இஸ்லாம் தொழிலாளியிடம், நீங்கள் கூலிக்காக ஒருவருடைய வேலையை செய்யும்போது நேர்மையுடன் செய்யுங்கள். மேலும் சோம்பல் மற்றும் கவனமின்றி செய்யாதீர்கள் என்று கூறுகிறது. மேலும் இஸ்லாம் ஆரோக்கியமான மற்றும் பலசாலிகளிடம் கூறுகிறது: நீங்கள் பலவீனமானவர்களின் மீது அநீதி இழைக்காதீர்கள். மேலும் குறைபாடுள்ள உடல் உடையவர்களை ஏளனப்படுத் தாதீர்கள். மாறாக உங்கள் அண்டை வீட்டாரின் பலவீனம் உங்களிடத்தில் கருணையை தூண்ட வேண்டும். அவரைக் கண்டு ஏளனமாக சிரிக்க கூடாது.

மேலும் செல்வந்தர்களிடம் இஸ்லாம் கூறுகிறது: அவர்கள் ஏழைகளை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் உங்களுடைய செல்வத்திலிருந்து ஒவ்வொரு வருடமும் நாற்பதில் ஒரு பங்கு 1/40 அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும். அதிலிருந்து அரசாங்கம் ஏழைகளின் முன்னேற்றத்திற்காக செலவு செய்ய வேண்டும். மேலும் ஏழை

ஒருவர் கஷ்டத்திலிருக்கும்போது அவருக்கு வட்டிக்கு பணம் கொடுத்து அவரது கஷ்டத்தை அதிகப்படுத்தாதீர்கள். மாறாக தனது செல்வத்திலிருந்து அவருக்கு உதவி செய்யுங்கள்.

ஏனெனில் இறைவன் நீங்கள் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பதற்காக உங்களுக்கு செல்வத்தைக் கொடுக்கவில்லை. மாறாக செல்வத்தினால் உலக முன்னேற்றத்தில் பங்கு பெற்று தனக்கென ஈருலக நற்கூலியை பெறுவதற்கே ஆகும். ஆனால் இஸ்லாம் ஏழைகளிடமும் கூறுகிறது: நீங்கள் செல்வந்தர்களின் செல்வத்தை பேராசை மற்றும் பொறாமையுடன் பார்க்காதீர்கள். அது உங்கள் உள்ளத்தை கருப்பாக்கி விடுகிறது. மேலும் சரியான வலிமைகளைப் பெறவிடாமல் தடுத்து விடுகிறது. எனவே நீங்கள் இறைவனின் உதவியால் உங்களுக்கும் எல்லா விதத்திலும் முன்னேற்றம் கிடைக்கும் அந்த ஆற்றல்களை உருவாக்குங்கள். மேலும் இஸ்லாம் அரசாங்கத்திற்கும் நல்வழிகாட்டுகிறது. அது கூறுகிறது: ஏழைகளின் இந்த முயற்சிகளில் அவர்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வரவேண்டும். மேலும் செல்வமும் ஆற்றலும் சிலரது கைகளில் மட்டும் இருக்குமளவிற்கு விட்டுவிடக் கூடாது.

மேலும் தங்களது மூதாதையர்களின் பெரிய வேலைகளினால் எவர்களுக்கு கண்ணியம் கிடைத்துள்ளதோ அதன் காரணத்தால் தமது சந்ததிகளும் மக்களிடம் கண்ணியத்திற்குரியவர்களாகி விட்டார்களோ அவர்களிடம் இஸ்லாம் கூறுகிறது: உங்கள் மூதாதையர்களுக்கு அவர்கள் செய்த உயரிய செயல்களுக்காக அவர்களுக்கு கண்ணியம் கிடைத்தது. நீங்களும் நல்ல செயல்களினால் அந்த கண்ணியத்தை தக்க வைத்துக் கொள்ளுங்கள். மேலும் மற்ற சமுதாயங்களை ஏளனமாகவும் அற்பமாகவும் எண்ணாதீர்கள். ஏனெனில் இறைவன் எல்லா மனிதர்களையும் சமமாக படைத்துள்ளான். மேலும் எந்த இறைவன் உங்களுக்கு கண்ணியத்தைக் கொடுத்தானோ அந்த இறைவன் மற்ற சமுதாயத்திற்கும் கண்ணியத்தை கொடுக்கலாம். எனவே நீங்கள் அவர்களுக்கு அநீதி இழைத்தால் நாளை அவர்கள் உங்களுக்கும் அநீதி இழைப்பார்கள். எனவே மற்றவர்களைவிட உங்களை உயர்ந்தவர் என பெருமையடித்து ஆணவம் கொள்ளாதீர்கள். மாறாக, மற்றவர்களை உயர்வாக எடுத்துக் கூறி பெருமைப்பட்டுக் கொள்ளுங்கள்.

ஏனெனில் எவர் தன் தாழ்த்தப்பட்ட சகோதரரை உயர்வாக்குகிறாரோ அவரே உயர்ந்தவராவார்.

மேலும் இஸ்லாம் கூறுகிறது: ஒரு நாடு மற்றொரு நாட்டுடன், ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்துடன் பகைமை கொள்ளவேண்டாம். மேலும் ஒருவர் மற்றவரது உரிமையை பறிக்க வேண்டாம். மேலும் ஒருவர் மற்றவரது உரிமையை பறிக்க வேண்டாம். மாறாக அனைவரும் இணைந்து உலக முன்னேற்றத்திற்காக முயற்சி செய்யுங்கள். மேலும் சில சமுதாயங்கள், நாடுகள் மற்றும் மக்களுக்கு எதிராக திட்டம் தீட்ட வேண்டாம். மாறாக, சமுதாயங்கள், நாடுகள், மற்றும் மக்கள் இணைந்து, மற்றவர்களுக்கு அநீதி இழைப்பதிலிருந்து தடுப்போம் என்றும் மற்ற நாடுகள், சமுதாயங்கள் மக்களை ஊக்கப்படுத்துவோம் என்றும் உடன்படிக்கை செய்து கொள்ளுங்கள்.

சுருக்கமாக, இந்த உலகின் திரைகளில், என்னுடைய அன்பிற்குரியவர்கள் யாராக இருக்கட்டும், எதுவும் இருக்கட்டும் இஸ்லாம் நமக்காக சாந்தி மற்றும் சமாதானத்திற்கு வழி வகை செய்கிறது என்பதை நான் காண்கிறேன். நான் என்னை எந்த நிலையில் வைத்து பார்த்தாலும் நான் அறிவது என்னவெனில், இஸ்லாமிய போதனையின் காரணமாக நான் இந்நிலையில் இருந்து கொண்டும்கூட, முன்னேற்றம் மற்றும் வெற்றியின் வழிகளிலிருந்து நான் தடுக்கப்படவில்லை. என்மனம் கூறுவது என்னவெனில், இஸ்லாம் எனக்கும், என் உறவினர்களுக்கும், என் நண்பர்களுக்கும் மேலும் நான் அறிந்திராத அந்த அந்நியனுக்கும், பெண்களுக்கும், ஆண்களுக்கும், உயர்ந்தவர்களுக்கும், தாழ்ந்தவர்களுக்கும், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும், உயர்ந்த மற்றும் தாழ்ந்த சமுதாயங்களுக்கும், மக்களுக்குள் ஒற்றுமையை விரும்புபவர்களுக்கும், தேசப்பற்றுடையவர்களுக்கும் முழுக்க முழுக்க பயனுள்ளதும் ஒட்டுமொத்த பயனளிக்கக் கூடியதும் ஆகும். மேலும் எனக்கும் மற்றும் என் இறைவனுக்கும் இடையில் நிச்சயமான தொடர்பையும் அன்பையும் ஏற்படுத்துகிறது. எனவே நான் இஸ்லாத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறேன். இப்படிப்பட்ட மார்க்கத்தை விட்டு மற்றொன்றை எப்படி என்னால் ஏற்றுக் கொள்ளவும் முடியும்?

*(ரிவியூ ஆ∴ப் ரிலீஜியன்ஸ் - மார்ச் 1940 பக்கம் : 26-31)*

**தமிழில்:**

**மவ்லவி சுல்தான் முஹ்யுத்தீன்**

# மறைவுச்செய்தி

சென்னை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைச் சேர்ந்த H. பஷீர் அஹ்மது 15.03.2010 அன்று காலை 10 மணியளவில் சாலை விபத்தில் இறையடி சேர்ந்தார்கள் (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

அன்னாருக்காக ஜனாஸாத் தொழுகை அவரது இல்லத்தில் நடைபெற்றது. 16.03.2010 அன்று காலை மேலப்பாளையம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நல்லடக்க மைதானத்தில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

மறைந்த ஜனாப் H. பஷீர் அஹ்மது அவர்கள் ஜமாஅத் பணிகளில் ஆர்வமுடையவராக விளங்கினார். இவர் ஜமாஅத்துக்காக அதிகமாக தொண்டு செய்த மர்ஹூம் ஹஸன் இப்ராஹீம் அவர்களின் இளைய மகனாவார்.

அன்னாரின் பிரிவினால் வருந்தும் அவருடைய அஹ்மதி சகோதர சகோதரிகளுக்கும் ஏனைய உற்றார் உறவினர்களுக்கும் இறைவன் சாந்தியும், சமாதானமும், ஆறுதலும் வழங்குவானாக.

அன்னாருக்கு மறுமையில் மன்னிப்பும் பேரின்ப வாழ்வும் கிடைக்க இறைவன் அருள்புரிவானாக. ஆமீன்.

### ஹஸ்ரத் ஐந்தாவது கலீ:்பத்துல் மஸீஹ்
### ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள்
### அனைத்துலகிலும் வாழும் அஹ்மதி முஸ்லிம்களிடம் வாங்கிய

# உறுதிமொழி

**அஷ்ஹது அ(ன்)ல்லாயிலாஹ இல்லல்லாஹு**
**வஹ்தஹூ லாஷரீகலஹூ.**
**வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வ ரஸூலுஹூ**

இன்று, (27, மே 2008) அஹ்மதிய்யா கிலா:்பத் நூறு ஆண்டு நிறைவு பெற்றதற்தாக, நாம் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு எடுத்துக் கொள்ளும் உறுதிமொழி என்னவென்றால், நாங்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தைப் பரப்புவதற்காகவும், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் பெயரை உலகின் எல்லைகள் வரை எட்டவைப்பதற்காகவும் எங்கள் வாழ்க்கையின் கடைசி நொடிப் பொழுது வரை முயற்சி செய்து கொண்டிருப்போம். மேலும் இந்த புனிதமான கடமையை நிறைவேற்றுவதற்காக எப்பொழுதும் எங்கள் வாழ்க்கையை இறைவனுக்காகவும், அவனது தூதர் (ஸல்) அவர்களுக்காகவும் அர்ப்பணித்திருப்போம். மேலும் மாபெரும் தியாகங்களை செய்து மறுமைவரை உலகின் ஒவ்வொரு நாட்டிலும் இஸ்லாத்தின் கொடியை மோலோங்கி வைப்போம். நாங்கள் கிலா:்பத் அமைப்பை பாதுகாப்பதற்காகவும், அதனை உறுதிபடுத்துவதற்காகவும் இறுதி மூச்சுவரை முயற்சி செய்து கொண்டிருப்போம்.

அஹ்மதிய்யா கிலா:்பத் மறுமை வரை பாதுகாப்புடன் இருப்பதற்காகவும், மறுமை வரை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மூலம் இஸ்லாம் பரவிக் கொண்டிருப்பதற்காகவும், முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடி உலகில் எல்லா கொடிகளையும் விட உயரமாக பறப்பதற்காகவும் கிலா:்பத்துடன் எப்பொழுதும் பற்றுள்ளவர்களாக இருக்குமாறும், அதன் அருள்களிலிருந்து பயன்பெறுமாறும் நாங்கள் எங்கள் சந்ததிகளுக்கும், சந்ததிகளின் சந்ததிகளுக்கும் அறிவுரை கூறிக் கொண்டிருப்போம் என்றும் நாங்கள் உறுதி கூறுகிறோம்.

இறைவா! நாங்கள் இந்த உறுதிமொழியை நிறைவேற்றும் நல்வாய்ப்பை நீ எங்களுக்கு வழங்குவாயாக.

அல்லாஹும்ம ஆமீன்! அல்லாஹும்ம ஆமீன்!! அல்லாஹும்ம ஆமீன்!!!

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

**NABI VAZHI** **Tamil Monthly March 2010**

**Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211**

## வெளிவந்து விட்டது !

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியும் ஆகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் எழுதிய 'எக் கலத்தீ கா இஸாலா' என்ற உருது நூலின் தமிழாக்கம் 'ஒரு தவறான எண்ணம் அகற்றப்படுகிறது' என்ற பெயரில் சாத்தான்குளத்தை சேர்ந்த ஜனாப் A.M.S. முபாரக் அஹ்மது சாஹிப் அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்துவிட்டது.

இந்நூலில் அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுக்க முழுக்க பின்பற்றியதன் மூலமாகவே தமக்கு நபிப்பதவி கிடைத்ததாகவும் புது ஷரீஅத்தைக் கொண்ட நுபுவ்வத் அல்ல என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு

**வெளியீட்டுச் செயலர்,**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**

11, முதல் பிரதான சாலை, யு. ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை-600024

பார்க்கத் தவறாதீர்கள்!

## தமிழன் தொலைக்காட்சியில்

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் காலை 8.00 மணி முதல் 8.30 மணி வரை ஒளிபரப்பாகும்

## மாநபி (ஸல்) அவர்கள் தந்த உண்மை இஸ்லாம்

என்ற எமது நிகழ்ச்சியை காணத் தவறாதீர்கள்.
திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் இஸ்லாத்தின் உண்மை நிலையை விளக்கும் ஓர் அரிய நிகழ்ச்சி

மேலும் விபரங்களுக்கு

**பிரசாரச் செயலர்,**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்**

11, முதல் பிரதான சாலை, யு. ஐ. காலனி, கோடம்பாக்கம், சென்னை-600024

E-Mail : amjchennai@yahoo.in

If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**

**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**

11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED** From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174. Editor : **O.M. MUZZAMMIL AHMAD**. Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.